
JESUS REDEEMS MINISTRIES
பாஸிட்டர் உலகம்
Volume: 16 | Issue: 09 | November 2026 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10
உன்னைப் போன்ற வாலிபர்களைப் பாவத்திலிருந்தும் படுகுழியிலிருந்தும்
பாதுகாக்க ஜெபம் என்ற அலங்காத்தை
எழுந்துக்கட்டு

உள்ளே!









வாலிபர் உலகம்

வாலிபக்கூலே! உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் விழிப்புணர்வையும் மாற்றத்தையும் உருவாக்கும் இந்தப் பத்திரிக்கையை ஒவ்வொரு மாதமும் முழுமையாக வாசித்து, உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்.



1 ஆண்டுக்கு ரூ.100/-

15 ஆண்டுகளுக்கு ரூ.1000/-

வாலிபர் உலகம் பத்திரிக்கைக்கான சந்தா அல்லது காணிக்கை செலுத்திய பின், 9750955547 என்ற எண்ணிற்கு தகவல் அனுப்பி உறுதிப்படுத்தவும்.

"வாலிபர் உலகம்" மாதாந்திர பத்திரிக்கை தமிழ், ஆங்கிலம், மலையாளம், ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியிடப் படுகிறோம்.

Scan ME

JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம், நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.

Phone: 04639-353333 | Cell:9750955547 | E-mail: youth@jesusredeems.org

www.jesusredeems.com | youth.jesusredeems.com



தலைவாசல்

எனக்கு அன்பான வாலிபர்களே,
இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்
என் அன்பின் வாழ்த்துக்கள்!

இன்றைய உலகில் வாலிபர்களின் வாழ்க்கையைப் பார்க்கும்போது, சாத்தான் அவர்கள்மீது எய்யும் அம்புகளும் ஆயுதங்களும் அவர்களை நிலைகுலையச் செய்கின்றன. வாலிபர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

நம் தேசத்திலும் பட்டணங்களிலும் ஏற்படும் தீமைகள் பெரும்பாலும் வாலிபர்களைப் பாதிக்கின்றன. பல தீமைகள் வாலிபர்களால் அரங்கேற்றப்படுகின்றன. ஒரு பக்கம் வாலிபர்களின் இரத்தம் சிந்தப்படுகிறது. மறுபக்கம் வாலிபர்களால் இரத்தம் சிந்தப்படுகிறது.

காரணம், பொல்லாத சாத்தான், வரப்போகிற மாபெரும் எழுப்புதலில் தேவன் வாலிபர்களைப் பயன்படுத்தப் போகிறார் என்பதை அறிந்திருக்கிறான். அதனால், வாலிபர்களைக் குறிவைத்து, அவர்களைப் பாவம் செய்கிறவர்களாகவும், மறுபக்கம் மற்றவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் நபர்களாகவும் மாற்றிவிடுகிறான்.



இவை அனைத்தும் நெகேமியாவின் நாட்களில் நடந்ததைப் போல உள்ளன. "ஜனங்கள் மகா தீங்கை அனுபவிக்கிறார்கள், அலங்கம் இடிக்கப்பட்டிருக்கிறது, வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டிருக்கின்றன" என்று ஆனானி, இஸ்ரவேலில் உள்ள ஜனங்களின் நிலையை அறிவித்தான்.

இதேபோல்தான் நம்முடைய தேசத்திலும், வாலிபர்களின் வாழ்க்கையில் பாதுகாப்பு என்ற மதில் இல்லாததால், பொல்லாத சாத்தான் அவர்களைப் பல பாவங்களிலும், போதை கலாச்சாரத்திலும், கொலைவெறியிலும், பாலியல் இச்சைகளிலும் விழும்படி செய்கிறான்.

அன்று ஒரு நெகேமியா எழும்பி அலங்கத்தைக் கட்டியதால், ஜனங்களின் வாழ்க்கையும் உயிரும் காக்கப்பட்டன. இன்றைக்கு நீயும் நெகேமியாவைப் போல எழும்பி, உன்னைப் போன்ற வாலிபர்களைப் பாதுகாக்க, **ஜெபம்** என்ற அலங்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.

- *உன்னுடைய ஜெபம், உன் கல்லூரியில் உன்ன வாலிபர்களை இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து பாதுகாக்கும்.*
- *உன் கண்ணீரின் ஜெபத்தால் உன் வேலை ஸ்தலத்தில் பாதுகாப்பு உண்டாகும்.*
- *நீ பிரயாசப்பட்டால், ஒரு கூட்டம் வாலிபர்களைச் சாத்தானின் கண்ணிக்கும் அவனுடைய சூழ்ச்சிக்கும் விலக்கிக் காக்க முடியும்.*

வாலிபனே, நெகேமியாவை போல நீயும் முழங்காலை முடக்கினால் உன் ஜெபத்தால் தேவனுடைய பிரசன்னம் ஒவ்வொரு கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும், வேலை ஸ்தலத்திலும் பாதுகாப்பு அரணாக இருக்கும்!

தீவிரமாய் செயல்படு! தீப்பிளம்பாய் எழும்பிடு!!

தேவ கிருபை உங்களோடு இருப்பதாக!

இயேசுவின் பணியில்
மோகன் சி. லாசரஸ்

சாட்சி: தொகுப்பு: வில்லியம்



சிறிய தொடக்கம்... பெரிய தரிசனம்!

ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து, இன்றைக்கு முக்கியமான அரசுத் துறையில் பணிபுரிவதோடு, கிராமங்கள் தோறும், பட்டணங்கள் தோறும் சென்று வாலிபர்கள் மற்றும் குழந்தைகள் மத்தியில் ஊழியமும் செய்து வரும் சகோதரர் அவர்களுடன் ஓர் நேர்காணல்...



உங்களது சிறு பிராயம் மற்றும் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்களேன்?

என் பெயர் கிமெல் (KIMEL). நான் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோருக்கு மூத்த மகனாகப் பிறந்தேன். எனக்கு இரண்டு சகோதரர்கள் இருக்கிறார்கள். ஒரு சகோதரர் அரசுத் தேர்வுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார், இன்னொரு சகோதரர் வேலை செய்து வருகிறார். நான் எனது பள்ளிப் படிப்பை எங்களது சொந்த ஊரில் உள்ள ஒரு அரசு பள்ளியில் படித்தேன். கல்லூரிப் படிப்பைத் திருநெல்வேலி மாவட்டத்தில் படித்து முடித்தேன். நான் இரட்சிக்கப்படாத பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன்.

பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்திலிருந்து நீங்கள் எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள்?

லாக்டவுன் நாட்களில் எங்களது ஆலயத்தில் தினமும் 1 மணி நேரம் வாலிபர்கள் இணைந்து தேசத்துக்காக ஜெபிப்பார்கள். எனது நண்பன் அந்த ஜெபத்தில் தினமும் கலந்துகொண்டு ஜெபிப்பான். ''தினமும் ஜெபம் நடைபெறுகிறது, நீயும் வா'' என்று என்னையும் கூப்பிடுவான். பல நாட்கள் என்னை அழைத்ததினால், ஒருநாள் என் நண்பன் வருத்தப்படக் கூடாது என்பதற்காக ஜெபத்தில் கலந்து கொண்டேன். போகும்போதே, ''அடுத்த நாள் ஜெபத்தில் கலந்துகொள்ளக் கூடாது'' என்று தீர்மானம் செய்துகொண்டே போனேன். ஆனால்,

போன அன்றைக்கே அங்குப் பாடப்பட்ட பாடல் மூலமாகவும், ஜெபத்தின் மூலமாகவும், வசனத்தின் மூலமாகவும் ஆண்டவர் என்னோடு பேசினார். அந்த நாளிலேயே ஆண்டவரை என் இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அதற்குப் பிறகு தினமும் அவர்களோடு இணைந்து தேசத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தேன்.



இரட்சிக்கப்பட்ட பின்பு உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் மாற்றம் உண்டானதா?

ஆம்... ஆண்டவர் என்னை உருவாக்கிக்கொண்டே வந்தார். உபவாச ஜெபங்கள் மற்றும் தேசத்துக்காக என்று அநேக ஜெபங்களையும் ஆண்டவர் செய்ய வைத்தார். இப்படி தேசத்துக்காக ஜெபம் பண்ணினதினாலும், ஆண்டவருக்காக ஊழியம் செய்ததினாலும், ஆசீர்வாதங்களை ஏற்ற நேரத்தில் என்னால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

சூப்பர்... ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்த நீங்கள், ஆண்டவருக்காக ஊழியம் செய்தீர்களா?

தொடர்ந்து ஆண்டவருக்காக ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். இப்போதும் ஆண்டவருக்காக ஊழியம் செய்து வருகிறேன். ஆண்டவர் எனக்கென்று ஒரு பெரிய தரிசனம் வைத்திருப்பதை அறிந்துகொண்டேன். ஆண்டவர் என்னோடு பேச ஆரம்பித்தார். அந்நாட்களில் கிராம ஊழியம் மற்றும் வாலிபர்களைச் சந்தித்தும், இயேசுவை அறிவித்தும், கைப்பிரதிகள் மூலமாகச் சுவிசேஷம் அறிவித்தும் வந்தேன். குழுவாகச் சென்று சிறு பிள்ளைகள் மத்தியில் ஊழியம் செய்தோம்.

ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு கிராமத்தை சந்தித்து, கைப்பிரதிகள் கொடுத்து, அங்கு ஆண்டவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கப் போய் வந்தோம். இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தோடு இணைந்து கிராம ஊழியம் செய்து வந்தேன். இப்படி பல ஊழியங்களைச் செய்யக் கர்த்தர் கிருபையும் பெலனும் தந்தார்.

ஆண்டவருக்காக ஊழியம் செய்து வருகிறேன் என்று சொன்னீர்கள்... நீங்கள் முழுநேர ஊழியரா?

நான் ஒரு அரசு பணியில் இருக்கிறேன். ஆனால், நான் அரசு வேலை கிடைத்த பிறகு, ஒரு ஐக்கியத்தோடு இணைந்து கர்த்தருக்காக ஊழியம் செய்கிறேன். எங்கள் பகுதியில் எழுப்புதல் உண்டாகும் என்று ஆண்டவர் பேசியிருக்கிறார். ஆகவே, எங்கள் தாலுகா மீது கவனம் செலுத்தி நாங்கள் ஜெபித்துக்கொண்டு வருகிறோம். அதுமட்டுமல்லாமல், வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறோம்.



ஓகே... நீங்கள் அரசு பணியில் இருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள்... இந்தச் சிறு வயதில் அரசாங்க வேலை எப்படி கிடைத்தது?

நான் B.Com முடித்து, அடுத்து நான் என்ன செய்ய வேண்டும் என்று ஜெபித்தபோது, **"நீ அரசு தேர்வுக்கு ஆயத்தப்படு, நான் உனக்கு வேலை தருவேன்"** என்று ஆண்டவர்





தெளிவாக என்னோடு பேசினார். நான் அரசு தேர்வுக்கு (TNPSC) தயாராக ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் அரசு தேர்வுக்கான பயணமாகவே இருந்தது. நான் கர்த்தருடைய சமூகத்தில் உட்கார்ந்து ஜெபித்தேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசத்தை வைத்தேன். நானும் என்னால் முடிந்த அளவு முயற்சி செய்து படித்து தேர்வு எழுதினேன். ஒரு சில மாதங்களில் ரிசல்ட் வந்தபோது, நான் ஆண்டவருடைய கிருபையினால் வெற்றி பெற்றேன். ஆண்டவரே என்னை வேலையில் உயர்த்தி வைத்தார். என் பெலத்தினால், ஞானத்தினால் இந்த வேலை கிடைக்கவில்லை; கர்த்தருடைய கிருபையினால் கிடைத்தது.

இந்த ஆசீர்வாதத்தை, இந்த நன்மையை, இந்த சமாதானத்தை நீங்கள் எப்படி பெற்றுக்கொண்டீர்கள்?

“நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” என்று ஆண்டவர் பேசிய அந்த வார்த்தை என்னைத் தொட்டதினால், கிராமங்கள், பட்டணங்கள் தோறும் நான் தனியாகச் சென்று ஆயிரக்கணக்கான கைப்பிரதிகள் கொடுத்திருக்கிறேன். இப்படி கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து, கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால், கர்த்தர் எனக்கு இந்த ஆசீர்வாதத்தை மிகக் குறுகிய காலத்தில் கொடுத்திருக்கிறார். நீங்களும் ஆண்டவர் எதிர்பார்க்கிறபடி ஊழியம் செய்யுங்கள். ஆண்டவர் உங்களுக்கும் இந்த ஆசீர்வாதத்தை மிகச் சீக்கிரத்தில் தந்து ஆசீர்வதிப்பார்.

வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

‘‘எருசலேமின் அலங்கம் இடிபட்டதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய் கிடக்கிறது’’ என்று அறிந்து, நெகேமியா அலங்கத்தை கட்ட எழும்பியது போல, நாமும் இடிந்து கிடக்கிற பட்டணங்களையும், கிராமங்களையும் எழுப்பி நிறுத்த வேண்டுமானால், வாலிபர்களாகிய நாம் இணைந்து செயல்பட்டால் சீக்கிரத்தில் நம் தேசத்தைக் கட்டி எழுப்பலாம்..

அன்பான வாலிபர்களே!

ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த சகோதரர் கிமெல் அவர்களுக்கு சிறுவயதிலேயே அரசு பணி கிடைத்து, இன்றைக்கு பெரிய அரசு அதிகாரிகள் மத்தியில் உயர்த்தி வைப்பதற்குக் காரணம், அவருடைய **ஜெபம், விசுவாசம், கடின உழைப்பு** மற்றும் **கர்த்தருக்கென்று ஊழியம் செய்ததே** ஆகும். நீங்களும் ஆண்டவருக்காக உண்மையாக ஊழியம் செய்யும்போது, ஆண்டவர் உங்களையும் கனப்படுத்தி ஆசீர்வதிப்பார்.



சிந்திக்க : பிரபா

எழுந்து கட்டியவர்கள்

1. நெகேமியா – பிரச்சனையைப் பார்த்து எழுந்தவர்

நெகேமியா எருசலேமின் நிலையை அறிந்ததும் வேதனைப்பட்டு அழுதார்; உபவாசித்து ஜெபித்தார். பின்னர் செயல்படத் தொடங்கினார் (நெகே. 2:18).

வாலிபனே, பிரச்சனையைப் பற்றிப் பேசுபவனாக மட்டும் இருக்காதே. தீர்வுக்காக எழுந்து நிற்பவனாக இரு!

2. எருசலேமின் மக்கள் – "நாமும் எழுந்து கட்டுவோம்" என்றவர்கள்

நெகேமியா ஒருவனாக எல்லாவற்றையும் செய்யவில்லை (நெகே. 2:18).

எருசலேமின் மக்கள் "நாம் எழுந்து கட்டுவோம்" என்று சொல்லி, நற்கிரியைக்காகத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள். ஒருவர் தொடங்கிய பணியில் மற்றவர்களும் இணைந்தார்கள்.

வாலிபனே, நீ தனியாகப் பெரிய மாற்றத்தை உருவாக்க வேண்டியதில்லை. சரியான மனிதர்களுடன் இணைந்து கட்டலாம்.

3. வெவ்வேறு மனிதர்கள் – ஒரே நோக்கத்திற்காகக் கட்டியவர்கள்

நெகேமியா 3-ல் ஆசாரியர்கள், பொற்கொல்லர்கள், வியாபாரிகள் எனப் பல்வேறு மனிதர்கள் மதிலைக் கட்டினார்கள். அவர்களின் தொழில் வேறுபட்டது; ஆனால் நோக்கம் ஒன்றாக இருந்தது.

வாலிபனே, நீயும் எல்லோருடனும் இணைந்து, ஒரே நோக்கத்தோடு செயல்படும்போது, அந்த நோக்கத்தை நிறைவேற்றலாம்.

கட்டத் தடையாய் இருந்தவர்கள்

1. சன்பல்லாத் – கேலி செய்தவன்

நெகேமியா கட்ட ஆரம்பித்தபோது சன்பல்லாத் கேலி செய்தான் (நெகே. 4:1-2). நீ எழுந்து கட்டும்போது எல்லோரும் உன்னைப் பாராட்டமாட்டார்கள்.

வாலிபனே, "உன்னால் முடியுமா?" "இதெல்லாம் எதற்கு?" "நீ யார்?" என்று கேட்பவர்கள் இருப்பார்கள். கேலியைக் கேட்டுக் கட்டுவதை நிறுத்தாதே!

2. தொபியா – சிறிய காரியமாகக் காட்டியவன்

"அவர்கள் கட்டுகிற கல் மதிலின்மேல் ஒரு நரி ஏறினாலும் அது இடிந்துபோம்" (நெகே. 4:3), என்று கூறி அவர்கள் செய்த வேலையைச் சிறுமைப்படுத்தினான்.

வாலிபனே, உன் கனவைச் சிறியதாகப் பார்க்கச் சொல்கிற குரல்களை எல்லாம் நம்பாதே.

3. சேமாயா – தவறான ஆலோசனை கொடுத்தவன்

நெகேமியாவை பயமுறுத்தி, தேவனுடைய ஆலயத்திற்குள் ஓடிப்போகச் சொன்னான். ஆனால் நெகேமியா அதை ஏற்றுக்கொள்ளவில்லை (நெகே. 6:10-13).

வாலிபனே, எல்லா ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்ளாதே. யார் சொல்கிறார்கள் என்பதைக் காட்டிலும், அது தேவனுடைய வார்த்தைக்கு ஏற்றதா? என்பதைப் பார்.

"நாம் எருசலேமின் அலங்கத்தை எழுந்து கட்டுவோம். வாருங்கள்" — நெகேமியா 2:17.



பாவத்திற்கு விலகி ஓடு!

யோசேப்பு சௌந்தரியமுள்ள ஒரு வாலிபன். அவன் எகிப்தில் போத்திபாரின் வீட்டில் இருந்தான். போத்திபார் தனது வீட்டின் எல்லாப் பொறுப்புகளையும் யோசேப்பிடம் ஒப்படைத்திருந்தான். போத்திபாரின் மனைவிக்கு யோசேப்பின்மீது தவறான ஆசை உண்டாகி, அந்த ஆசையை நிறைவேற்ற அவனை அழைத்தாள். ஆனால், யோசேப்பு, "என்னை உருவாக்கிய தேவன், என்னை ஆசீர்வாதமாக வைக்கும்படி தெரிந்துகொண்டிருக்கிறார். அவர் என்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்" என்ற உணர்வு அவனுக்குள் இருந்ததால், அவன் அந்தப் பாவத்திற்கு இடம் கொடுக்காமல் அங்கிருந்து விலகி ஓடினான்.

யோசேப்பால் இது எப்படி முடிந்தது?

வேதம் சொல்கிறது: **"தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான்"** (ஆதி. 39:12). யோசேப்பு பாவத்தை எதிர்த்து நின்று விவாதிக்கவில்லை; அதிலிருந்து **விலகி ஓடினான்**. தேவன் உங்களைக் குறித்தும் ஒரு பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார். ஒரு பெரிய தரிசனத்தை வைத்திருக்கிறார். உங்களைக் கொண்டு ஒரு மாபெரும் காரியத்தைச் செய்யப் போகிறார். பிசாசு இதை அறிந்திருக்கிறபடியினால், அவன் உங்களை வழிதவறச் செய்வதற்காகவும், உங்கள் தரிசனத்தைக் குலைத்துப்போடுவதற்காகவும், உங்கள் எதிர்கால ஆசீர்வாதத்தைக் கெடுத்துவிடுவதற்காகவும், உங்களைச் சாபத்திற்குள்ளாக்குவதற்காகவும் பாவ சோதனைகளையும் பாவக் கண்ணிகளையும் கொண்டு வருவான் என்பதை நீங்கள் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. **"வாலிபனே! நீ உன் வாலிபத்தின் இச்சைகளுக்கு விலகி ஓடி, சுத்த இருதயத்தோடு கர்த்தரைத் தொழுதுகொள்"** என்று 2 தீமோத்தேயு 2:22 சொல்கிறது.

பாவம் எங்கோ தொலைவில் இருக்கிறது என்று எண்ணிவிடாதீர்கள். **"நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தைத் தள்ளிவிட்டு"** (எபி. 12:1) என்று வேதம் சொல்கிறது.நீங்கள் படிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில், வசிக்கிற இடத்தில், நீங்கள் போகிற வருகிற சூழ்நிலைகளில் உங்களைப் பாவத்திற்குள் இழுத்துச் செல்லும்படி சில நண்பர்களைக்கூட பிசாசு ஆயத்தப்படுத்தி அனுப்பக்கூடும்.

வாலிப வயதில் ஓர் அர்ப்பணிப்பு!

இந்த வாலிப வயதில், யோசேப்பைப் போல, **"பாவத்திற்கு என்னால் இடம் கொடுக்க முடியாது"** என்று உங்கள் இருதயத்தில் தீர்மானியுங்கள்.

வாலிபத்தின் இச்சைகளுக்கு விலகி ஓடுங்கள். கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வார்.



யோசேப்பு பாவத்திற்கு விலகி ஓடியபோது, **கர்த்தர் அவனோடு இருந்தார்.** அவன் உண்மையாக நடந்துகொண்டதால் தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

நீங்கள் படிக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில் வரும் சோதனைகளுக்கு நடுவிலும் உங்களைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள தேவன்



செய்தி: மோகன் சி. லாசரஸ்

உங்களோடு இருக்கிறார். உங்கள் வாழ்க்கையை அவருடைய கரத்தில் கொடுத்துவிடுங்கள். பரிசுத்தமாக வாழ வேண்டும் என்ற வாஞ்சை உங்களுக்குள் இருந்தால், அவர் உங்களைக் காத்துக்கொள்வார். சோதனைகளை மேற்கொள்ள அவர் கிருபை தருவார். **அவரால் உங்களைக் காத்துக்கொள்ள முடியும்!**

"நீர் என் கையைப் பிடித்து நடத்தும்!"

என்னை ஊழியத்திற்கு கர்த்தர் அழைத்தபோது, நான், **"ஆண்டவரே! வாலிப வயதில் ஒரு ஊழியக்காரன் பரிசுத்தமாக வாழ்வது கடினம். நான் உமது கையைப் பிடித்தால் விட்டுவிடக்கூடும். நீர் என் கையைப் பிடித்து நடத்தினால் நான் வருகிறேன்.**



எந்தப் பாவ சோதனைகளோ, உபத்திரவங்களோ வந்தாலும் என்னைக் கடைசிவரைக்கும் கொண்டுபோவீர் என்று சொன்னேன்." அப்போது ஆண்டவர், **"உன் வலது கையைப் பிடித்து நான் நடத்துவேன்"** என்று எனக்கு வாக்குக் கொடுத்தார். அன்றைக்கு என் வாழ்க்கையை அவருடைய கரத்தில் கொடுத்தேன். அன்று முதல் அவர் என் கரத்தைப் பிடித்து நடத்தினார். ஊழியப் பாதையில் எத்தனையோ சோதனைகளும் போராட்டங்களும் வந்தபோதிலும், கர்த்தர் ஒருநாளும் என்னைக் கைவிடாமல் இதுவரை நடத்திக்கொண்டு வருகிறார். **அந்தக் கர்த்தர் உங்களையும் நடத்துவார்!** பாவ சோதனைகளைக் கண்டு பயப்படாதீர்கள், உங்களைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள கர்த்தரால் முடியும். அவரை நம்பி, உங்கள் வாழ்க்கையை அவருடைய கரத்தில் கொடுங்கள்.

"என்னால் முடியாது" என்று சொல்லாதீர்கள்!

"இவையெல்லாம் IT Industryயில் இருக்கும் எங்களுக்குக் கஷ்டம். மாதத்தில் ஒருநாள் ஜாலியாக நண்பர்களோடு சென்று குடித்தால் தான், மன அழுத்தத்தை மாற்ற முடியும். ஆகையால், எங்களால் குடிக்காமல் இருக்க முடியாது" என்று நினைக்காதீர்கள்.

தானியேலால் முடிந்தது என்றால், யோசேப்பால் முடிந்தது என்றால், **உங்களாலும் முடியும்!** கர்த்தர் உங்களோடு இருந்தால் கட்டாயம் முடியும்.

"என்னோடு இருக்கிற இயேசு பரிசுத்தமுள்ளவர். நான் இதைத் தொடுவதில்லை" என்று உங்களால் தைரியமாகச் சொல்ல முடியும்.

கர்த்தருக்கு முதலிடம் கொடுத்தால் உங்களால் முடியும். சில காரியங்களுக்கு "No" என்று சொல்லித்தான் ஆக வேண்டும். நீங்கள் சொல்லும் அந்த "No"-வை தேவன் கனப்படுத்துவார். **உங்கள் வாழ்க்கை ஆசீர்வாதமாக மாறும்.**

எனக்கன்பான வாலிபர்களே! யோசேப்பைக் கர்த்தர் எப்படி உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து கனப்படுத்தினாரோ, அதேபோல உங்களையும் உயர்த்தப் போகிறார். உங்களைத் தேசத்திற்கு ஓர் ஆசீர்வாதமாக மாற்றப் போகிறார். ஆனால், அந்த ஆசீர்வாதப் பாதையில் பரிசுத்தம் மிகவும் முக்கியம். யோசேப்பு பாவத்திற்கு விலகி ஓடியதுபோல, நீங்களும் பாவத்திற்கு விலகி ஓட வேண்டும்.

முகப்பு செய்தி: சதீஷ்

எழுந்து கட்டுவோம்



ஒரு தலைமுறையை மாற்றுவதற்கு ஆயிரக்கணக்கானோர் தேவைப்படுவதில்லை. சில நேரங்களில், தேவனுடைய இருதயத்தை உணர்ந்து, அவருடைய வேலைக்காக எழுந்து நிற்கும் ஒரு மனிதனைக் கொண்டு ஆண்டவர் அவருடைய திட்டத்தைச் செய்து முடித்துவிடுவார். ஆண்டவரின் இருதயத்தின் பாரத்தை உணர்ந்து, செயல்பட்ட ஒரு மனிதன்தான் நெகேமியா.



எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டதும், சிறையிருப்பில் இருக்கிறவர்கள் அந்தத் தேசத்தில் மகா தீங்கையும் நிந்தையையும் அனுபவிக்கிறார்கள் என்பது பலருக்குச் செய்தியாக இருந்தபோது, நெகேமியாவிற்கு அது பாரமாக இருந்தது. ஜனங்கள்மீது பாரம் உள்ளவராகவும், அவர்களை விசாரிக்கிற இருதயம் உள்ளவராகவும் இருந்தபடியால், சூசான் அரண்மனையை விட்டு ஜனங்களைத் தேடிப் போனார்.

இன்றைக்கும் நம்மைச் சுற்றி ஏராளமான வாலிபர்கள் பாவத்திலும், சாபத்திலும், அடிமைத்தனத்திலும் சிக்குண்டு, நம்பிக்கை இழந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அநேகரின் குடும்ப வாழ்க்கை இடிக்கப்பட்ட நிலையில் உள்ளது. பலர் இதைக் கண்டும் காணாமல் கடந்து போகிறார்கள். ஆனால் நீங்கள் நெகேமியாவைப் போல விசாரிக்கிற இருதயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். அவர்களின் குடும்பங்கள் கட்டப்பட நீங்கள் எழுந்து புறப்பட்டுப் போகும்போது, அநேகரின் வாழ்க்கை கட்டப்படும்.

நெகேமியா சொகுசான அரண்மனை வாழ்க்கையை விட்டு, பல மைல்கள் பிரயாணப்பட்டுப் புறப்பட்டுச் சென்று, அநேகரின் வாழ்க்கையைக் கட்டும்படி போனார். நீங்கள் உங்கள் நேரத்தைச் சமூக வலைத்தளங்களிலும், நண்பர்களிடமும் வீணாக்காமல், தேவையுள்ள ஜனங்களைத் தேடிப் போய், அவர்களின் வாழ்க்கையைக் கட்டும்படி பிரயாசப்படுங்கள்.





நீங்கள் வசிக்கும் இடம், படிக்கிற பள்ளி, கல்லூரி, வேலை ஸ்தலம் ஆகியவை உங்களுடைய ஊழியக் களமாக மாறட்டும்.

"யாரை நான் அனுப்புவேன்; யார் நமது காரியமாய் போவான்?" (ஏசாயா 6:8) என்று உரைக்கிற தேவனுடைய சத்தத்தைக் கேட்டு, **"இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்"** (ஏசாயா 6:8) என்று அர்ப்பணித்துக்கொள்ளும்போது, தேவன் உங்களைப் பயன்படுத்துவதைப் பார்க்க முடியும்.

பாவத்திலும், சாபத்திலும் கட்டுண்டு, சிறுமைப்பட்ட நம் தேசத்தின் ஜனங்களின் வாழ்க்கையை கட்டும்படி, ஆண்டவர் அநேக மிஷனெரிகளை அனுப்பினார். அவர்கள் மூலமாக இடிந்து கிடந்த குடும்பங்கள் சீரமைக்கப்பட்டன. அவர்களில் மிகவும் முக்கியமானவர் **வில்லியம் கேரி.** அவர் தனது காலத்தில் இந்திய மக்களிடம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பாரத்துடன் இந்தியாவிற்கு வந்து, இந்திய மொழிகளைக் கற்றுக்கொண்டு, மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டு, அநேகரின் வாழ்க்கையைக் கட்டும் தேவனுடைய கருவியாக மாறினார்.

அவர் எதிர்பார்த்தபடி எல்லாம் எளிதாக நடைபெறவில்லை. புதிய மொழி, புதிய கலாச்சாரம், இழப்புகள், சூழ்நிலை மாற்றம் எனப் பல சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இவை எல்லாவற்றிலும் நெகேமியாவைப் போல மன உறுதியுடன் இருந்து, தேவத் திட்டத்தைச் செய்து முடித்தார் வில்லியம் கேரி.

உங்கள் வாழ்க்கையிலும் தேவத் திட்டம் நிறைவேற முடியாதபடி சவால்கள் பல இருக்கலாம்; ஆனால் நீங்கள் நெகேமியாவைப் போல, **"நான் பெரிய வேலை செய்கிறேன்"** (நெகேமியா 6:3) என மன உறுதியுடன் இருந்து, கர்த்தருக்காகச் செயல்படுங்கள்.

நீங்கள் வசிக்கும் இடம், படிக்கிற பள்ளி, கல்லூரி, வேலை ஸ்தலம் ஆகியவை உங்களுடைய ஊழியக் களமாக மாறட்டும். தேவன் உங்களுக்குக் கொடுத்த படிப்பு, ஞானம், வசதி வாய்ப்புகள் இவை எல்லாவற்றையும் ஆண்டவருக்குப் பிரயோஜனமாக இருக்கப் பயன்படுத்துங்கள்.

நெகேமியா ஆண்டவர் அவருக்குக் கொடுத்த வசதி வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தினபடியால், சிறையிருப்பில் இருந்த ஜனங்கள் விடுவிக்கப்பட்டார்கள். தேவன் உங்களுக்குக் கொடுத்த நேரத்தையும், திறமையையும், வாலிபத்தையும் கட்டப்பட்ட ஜனங்களின் வாழ்க்கையைக் கட்டுவதற்குப் பயன்படுத்துங்கள்.

சவால்களைக் கண்டு பின்வாங்காமல், **"எழுந்து கட்டுவோம்"** என்று சொல்லி முன்னேறிச் செல்லுங்கள். **"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்"** (மத்தேயு 28:19) என்று சொன்னவர், உங்களோடு இருந்து அநேகரின் வாழ்க்கையை மாற்றி அமைப்பார்.

எனக்கன்பான வாலிபர்களே, இடிந்துபோன அநேகரின் வாழ்க்கையைச் சீர்படுத்தி, சுவிசேஷத்தை அறிவித்து, இருளில் இருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சத்தைக் காண்பித்து, வழிதவறிப்போன வாலிபர்களைச் சரியான வழியில் வழிநடத்துவதற்கு, ஆண்டவராகிய இயேசுவுக்கு நீங்கள் தேவை.



எனவே, நீங்கள் பயப்படாமலும் தயங்காமலும் அநேகரின் வாழ்க்கையைக் கட்டுவதற்கு இன்றே புறப்பட்டுப் போங்கள். கர்த்தர் உங்களோடு இருந்து பெரிய காரியங்களைச் செய்வார்!!



நம் உடல் அற்புதமாகப் படைக்கப்பட்டிருந்தாலும், நாம் நம்மைப் படைத்தவரையே சார்ந்திருக்கிறோம் என்பதை அது காட்டுகிறது. நம் உடலின் ஒவ்வொரு அமைப்பும், மனிதனுக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனையையும், தேவனோடு உறவு மீண்டும் சரியாக வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகிறது. அது எப்படி என்பதை இத்தொடரில் பார்க்கலாம்.

நாம் சரியாகக் கேட்பதற்கு என்ன தேவை?

காற்று அலைகள்

The Mirror: காற்று அலைகள் மூலம் வரும் அதிர்வுகளை காதில் உள்ள மிக நுண்ணிய stereo cilia (காது முடிகள்) மின்சாரச் சமிக்ஞைகளாக மாற்றுகின்றன; அதையே நம்மூளை ஒலியாக உணர்கிறது.

The Deficit: தொடர்ச்சியான அதிக சத்தம் இந்த மென்மையான காது முடிகளை நிரந்தரமாக சேதப்படுத்தி, மெதுவான சத்தங்களைக்கூட கேட்கும் திறனைக் குறைக்கலாம்.

The Light: **"விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி கிறிஸ்துவின் வார்த்தையினாலே வரும்."** — ரோமர் 10:17; நம் உள்ளம் கேட்க வேண்டிய உண்மையான சத்தம் கிறிஸ்துவின் வார்த்தையே. மத்தேயு 12:34; லூக்கா 6:35

The Jamming Signal: தொடர்ந்து வரும் notifications, social media, music, streaming மற்றும் உலகத்தின் பல குரல்கள் நம் உள்ளத்தை நிரப்பி,



தேவனுடைய குரலைக் கேட்கும் உணர்வை மெதுவாக மங்கச் செய்யும்.

The Diagnostic: நான் கிறிஸ்துவின் குரலைக் கேட்பதில் வளர்கிறேனா, அல்லது உலகத்தின் சத்தங்கள் என் இருதயத்தை ''கேட்பதில் மந்தமாக'' மாற்றிவிட்டனவா? என்று யோசித்துப் பாருங்கள் — எபிரெயர் 5:11

The Cure:

ஒரு பொருளில் பிரச்சனை ஏற்பட்டால், அதை உருவாக்கியவரிடமே repair செய்ய வேண்டும். அதுபோல, நம்மை உருவாக்கிய கிறிஸ்துவே நம் உண்மையான தேவையும் தீர்வும். பாவத்தால் ஏற்பட்ட நம் பிரச்சனையை நம்மால் சரிசெய்ய முடியாது. நாம் பெற வேண்டிய தண்டனையை இயேசு சிலுவையில் நம்மிடத்தில் ஏற்றுக்கொண்டார் **(ஏசாயா 53:5).** அவர் மரித்து உயிர்த்தெழுந்ததன் மூலம், நம்மை தேவனோடு ஒப்புரவாக்கி, அவரோடு நித்திய உறவைத் தந்தார் **(ரோமர் 5:10—11).** கிறிஸ்து ஒரு தீர்வு மட்டுமல்ல—அவரே நம் நித்தியத் தேவை.

The Restored Signal: "என் ஆடுகள் என் சத்தத்தைக் கேட்கின்றன... அவைகள் எனக்குப் பின்செல்கின்றன" (யோவான் 10:27). பிரபஞ்சத்திற்கே கட்டளையிடும் Master Creator, உன் இருதயத்தை reset செய்ய தமது வார்த்தையை அனுப்புவார். கிறிஸ்து உன் signal-ஐ reset செய்யும்போது, இக்கலாச்சாரத்தின் தவறான சத்தங்களைத் தாண்டி அவருடைய குரலை அடையாளம் காணும் புதிய spiritual capacity-யை உன் இருதயத்திற்குத் தருவார்.

யோவான் ஸ்நானகனை நினைத்துப் பாருங்கள். அவர் வனாந்தரத்தில் தங்கி, அந்த supreme voice-ஐ அறிந்துகொள்ளக் கற்றுக்கொண்டார்; அதே வனாந்தரத்தில் வார்த்தையான தேவனின் சத்தமாக மாறினார் **(யோவான் 1:23).**



Prayer: "ஆண்டவராகிய இயேசுவே, என்னைச் சுற்றியுள்ள சத்தங்களையும், என் உள்ளத்தில் இருக்கும் பாவத்தையும் நீக்கிவிடும்; என் இருதயத்தைப் புதுப்பித்து, உமது வார்த்தையின் மூலம் உமது குரலைத் தெளிவாகக் கேட்கச் செய்து, உம்மைப் பின்பற்றவும் மற்றவர்களை உம்மிடம் வழிநடத்தவும் எனக்கு உதவும்."

உங்கள் பகுதி: காதுகளின் வாசலில் ஆவியின் பட்டயம் ஏந்திய காவலாளியாக நில்லுங்கள்.

தேவனின் பகுதி: உங்கள் இருதயம் அவர் தங்கும் இடம்; அதனை தெய்வீக சத்தியமான அவரே காப்பார்.

சத்தத்தில் சிக்காதே; கிறிஸ்துவோடு இசைந்திரு!

உலகத்தைத் தாண்டி, ஜீவனுள்ள வார்த்தையைப் பேசு!

உன் குரல் – இரைச்சலைக் கிழிக்கட்டும்;

ஒரு தலைமுறை இயேசுவின் சத்தத்தைக் கேட்கட்டும்!

"இந்த பரபரப்பான உலகத்தின் இரைச்சலும் குழப்பமும், நம் ஆவிக்குள் ஒலிக்கும் தேவனுடைய மென்மையான சத்தத்தை மூழ்கடிக்க முடியாது."

— C. H. Spurgeon

...Signal Reset தொடரும்.

ஒரு வாழ்க்கை... ஒரு அழைப்பு.

அவள் செல்வத்தையோ, அதிகாரத்தையோ, பாதுகாப்பையோ எடுத்துக்கொண்டு செல்லவில்லை. ஆனால் கிறிஸ்துவைத் தன் வாழ்க்கையில் சுமந்து சென்றாள். அவள் சென்ற இடத்தில், அவளுடைய வாழ்க்கை ஒரு அழியாத தடத்தை ஏற்படுத்தியது. அவள் யார் தெரியுமா? மேரி ஸ்லெஸ்ஸர்



ஸ்காட்லாந்தில் உள்ள Aberdeen என்ற இடத்தில் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் மேரி ஸ்லெஸ்ஸர் பிறந்தாள். அவளுடைய தந்தை John Slessor ஒரு shoemaker. அவளுடைய தாய் Mary ஒரு நெசவாளர். குடும்பத்தில் வறுமை அதிகமாக இருந்ததால், மேரி 11 வயதிலேயே தொழிற்சாலையில் வேலைக்குச் சென்றாள். ஆனால், அந்தச் சிறிய வயதிலேயே அவளுடைய மனதில் தேவனுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆசை இருந்தது.



ஒருநாள், ஆப்பிரிக்காவின் ஆபத்தான காடுகளுக்குள் அவள் ஏன் சென்றாள்?

மேரி ஸ்லெஸ்ஸர் (1848–1915) சிறுவயதிலேயே ஒரு வயதான தாயார் மூலம் கிறிஸ்துவைத் தன் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டாள். டேவிட் லிவிங்ஸ்டனின் வாழ்க்கை அவளை மிகவும் ஈர்த்தது. அதனால், அவள் மனதில் ஒரு கேள்வி தொடர்ந்து இருந்தது: "தேவனுக்காக நான் என்ன செய்ய முடியும்?" இந்தக் கேள்வியோடு வளர்ந்த மேரி, 1876-ல் தனது 28-வது வயதில் Calabar, Nigeria சென்றாள்.



அங்கே மிஷன் நிலையத்தில் மட்டும் இருந்து பணியாற்றாமல், மக்களோடு மக்களாகச் சென்றாள். அவர்களின் எஃபிக் (Efik) மொழியைக் கற்றுக்கொண்டாள். குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தாள்.



நோயாளிகளைப் பராமரித்தாள். பெண்களைப் பாதுகாத்தாள். சுவிசேஷத்தையும் அறிவித்தாள்.

ஆனால், மேரியை மக்கள் நினைவில் வைத்ததற்குக் காரணம் இதைவிடப் பெரியது.

அந்தக் காலத்தில், அங்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தால், அவர்களைக் கொன்றுவிடும் ஒரு கொடூரமான பழக்கம் இருந்தது. இதைக் கண்ட மேரியால் அமைதியாக இருக்க முடியவில்லை. சமுதாயத்தால் கைவிடப்பட்ட குழந்தைகளை அவள் தன்னுடன் சேர்த்துக்கொண்டாள். அவர்களைப் பராமரித்தாள். அவர்களைப் பாதுகாத்தாள். தன் வீட்டையே அந்தக் குழந்தைகளுக்கு அடைக்கலமாக மாற்றினாள். நாளடைவில், மேரி ஒரு மிஷனெரியாக மட்டுமில்லாமல், அந்தக் குழந்தைகளுக்கு ஒரு தாயாக மாறினாள். அதனால், மக்கள் அவளை "Ma Akamba – The Great Mother" என்று அழைக்கத் தொடங்கினர்.



ஆனால், அந்தப் பெயருக்குப் பின்னால் இருந்த வாழ்க்கை மிகவும் கடினமானது. மலேரியா நோய் அவளை அடிக்கடி தாக்கியது. தனிமையைச் சந்தித்தாள். ஆபத்தான இடங்களுக்குப் பயணம் செய்தாள். பழங்குடிகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டபோது, அவர்களுக்குள் சென்று சமாதானம் செய்ய வேண்டிய சூழ்நிலைகளும் வந்தன. இத்தனை கஷ்டங்கள் இருந்தாலும், மேரி பின்வாங்கவில்லை. அவள் ஒருமுறை, "என் ஒரே பெரிய ஆசையும் இளைப்பாறுதலும் ஜெபமே" என்று எழுதினாள்.





அவளுடைய நம்பிக்கை சூழ்நிலைகளில் இல்லை. தேவனில்தான் இருந்தது. பின்னர், அவள் இன்னும் ஆழமான Okoyong பகுதிக்குச் சென்றாள். அங்கேயும் மக்களுக்காகப் பணியாற்றினாள். சமாதானம் செய்தாள். குழந்தைகளைப் பாதுகாத்தாள். அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தாள். சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள். அதனால், மக்கள் அவளை "Queen of Okoyong" என்று அழைத்தனர். ஆனால், அவளிடம் உண்மையான கீரீடம் எதுவும் இல்லை. அவளுடைய உண்மையான பலம் ஜெபம்தான்.

மலேரியா மற்றும் பல துன்பங்களுக்கு நடுவிலும், மேரி இவ்வாறு சொன்னாள்: "நற்செய்தியைப் பிரசங்கிக்க கிறிஸ்து என்னை அனுப்பினார்; அதன் விளைவுகளை அவர் பார்த்துக்கொள்வார்." 1915-ல் மேரி மரித்தாள். அதோடு அவளுடைய வாழ்க்கை முடிந்துவிட்டதா இல்லை. அவள் விட்டுச் சென்ற தாக்கம் தொடர்ந்து கொண்டே இருந்தது.



ஒருமுறை தன் சீடர்களிடம் மேரி இவ்வாறு சொன்னாள்: "Give up your whole being to create music everywhere, in the light places and in the dark places, and your life will make melody." அதுதான் மேரி ஸ்லெஸ்ஸரின் வாழ்க்கை நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடம். அவள் வசதியான வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கவில்லை. தன்னைச் சுற்றியிருந்த மக்களின் தேவையைப் பார்த்தாள். அவர்களுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தாள்.



மேரியின் வாழ்க்கை இன்று நம்மிடமும் ஒரு கேள்வியைக் கேட்கிறது: உங்கள் வாழ்க்கை உலகத்திற்காகவா? அல்லது கிறிஸ்துவுக்காகவா? உங்கள் வயது, உங்கள் பின்னணி, உங்கள் பலவீனம்—எதுவாக இருந்தாலும், அது தேவனுடைய அழைப்புக்குத் தடையாக இருக்க வேண்டியதில்லை. உங்கள் முழு வாழ்க்கையையும் கிறிஸ்துவுக்குக் கொடுத்தால், நீங்கள் இருக்கும் இடத்திலேயே ஒரு "melody" உருவாகலாம்.



சாதனை: சுமா கிரேஷன்



அன்பான இளம் சாதனையாளர்களுக்கு மின்னிடைய அன்பின் வாழ்த்துக்கள்!

நாம் வளர்கின்ற இடம் நம்முடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்காது. கடின உழைப்போடு கூடிய விடாமுயற்சியே வளமான எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறது. அப்படி தன் விடாமுயற்சியால் வெற்றிகண்ட சாதனையாளரின் வாழ்க்கைப் பயணம், உங்களது விடாமுயற்சிக்காக...

José Hernández ஒரு அமெரிக்க பொறியியலாளரும், முன்னாள் **NASA** விண்வெளி வீரரும் ஆவார். அவர் ஆகஸ்ட் 7, 1962 அன்று அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள **French Camp** என்ற இடத்தில் பிறந்தார். அவரது குடும்பம் மெக்சிகோவைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர் குடும்பமாகும். **José** தனது 12 வயது வரை ஆங்கிலம் பேசக் கற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும், கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் ஆர்வம் காட்டினார்.

அவர் **University of the Pacific, University of California, Santa Barbara** ஆகியவற்றில் மின்சாரம் மற்றும் கணினிப் பொறியியல் கல்வியைப் பயின்று முதுகலைப் பட்டமும் பெற்றார். பின்னர் அவர் **Lawrence Livermore National Laboratory**-யில் பணியாற்றினார்.

விண்வெளி வீரராக வேண்டும் என்ற கனவை நிறைவேற்ற அவர் **NASA**விற்கு பலமுறை விண்ணப்பித்தார். 11 முறை நிராகரிக்கப்பட்டார். அவர் 11 முறையும் சோராமல் தன்னுடைய திறமைகளை வளர்த்துக்கொண்டே முயற்சித்தார். இறுதியாக, 2004ஆம் ஆண்டு **NASA** விண்வெளி வீரர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2006ஆம் ஆண்டு **Astronaut Candidate training**-ஐ முடித்த பிறகு, 2009ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 முதல் செப்டம்பர் 1 வரை, **space shuttle Discovery**-யின் **STS-128** விண்வெளிப் பயணத்தில் **mission specialist**-ஆகப் பங்கேற்றார். இந்தப் பயணத்தின்போது அவர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்று, சுமார் 14 நாட்கள் விண்வெளியில் இருந்தார். அவரது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு **"A Million Miles Away"** என்ற திரைப்படமும் வெளியானது.



இதை வாசிக்கும் வாலிபர்களே, Joseன் வாழ்க்கை, ஏழ்மையான சூழ்நிலை, மொழித் தடைகள் மற்றும் பல தோல்விகளைக் கொண்டதாய் இருந்தாலும், விடாமுயற்சி, கல்வி, கடின உழைப்பு ஆகியவற்றின் மூலம் உயர்ந்த சாதனையை அடைய முடியும் என்பதற்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டாகும்.

CAREER Guidance

வேலை செய்து கொண்டே UPSC தேர்வுக்குப் படிப்பது எப்படி?

வேலை செய்து கொண்டே UPSC Civil Services Examination-க்கு தயாராவது சவாலானது என்றாலும், சரியான திட்டமிடல், நேர மேலாண்மை மற்றும் தொடர்ச்சியான முயற்சி இருந்தால் நிச்சயம் முடியும்.

1. தினசரி நேர அட்டவணை

காலை 1-2 மணி நேரம் முக்கிய பாடங்களைப் படிக்கவும்.	வேலை முடிந்ததும் 1-2 மணி நேரம் Revision / Answer Writing செய்யவும்.	தினமும் குறைந்தது 3-4 மணி நேரம் படிக்க முயற்சி செய்யுங்கள்.

2. அடிப்படைப் பாடங்களில் கவனம்

முதலில் தேர்ந்தெடுத்த சில முக்கிய ஆதாரங்களைப் படித்து நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள்:
NCERT, Polity, History, Geography, Economy, Environment, Science & Technology, Current Affairs.

அதிக புத்தகங்களைப் படிப்பதைவிட, தேர்ந்தெடுத்த புத்தகங்களை மீண்டும் மீண்டும் படிப்பது சிறந்தது.

3. Current Affairs

தினமும் 30-45 நிமிடங்கள் செய்திகளைப் படித்து, தேர்வுக்குத் தேவையான முக்கியத் தகவல்களைச் சுருக்கமாகக் குறிப்பெடுக்கவும்.

4. Answer Writing & MCQs

தினமும் 1-2 Mains கேள்விகளுக்கு பதில் எழுதிப் பழகுங்கள்.	தினமும் 20-25 MCQs பயிற்சி செய்யுங்கள்.	வாரத்திற்கு குறைந்தது 1 Mock Test எழுதுங்கள்.

5. வார இறுதியைப் பயன்படுத்துங்கள்

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுதல் நேரம் ஒதுக்கி:	Revision + Mock Test + Answer Writing செய்யுங்கள்.

6. சிறிய இலக்குகள்

பெரிய இலக்கைச் சிறிய பகுதிகளாகப் பிரியுங்கள்.

இந்த வாரம்: Polity – 5 Chapters	தினமும்: 25 MCQs	வாரத்திற்கு: 1 Mock Test

தினசரி அட்டவணை

நேரம்	செயல்
5:30–7:00 AM	முக்கியமான பாடம்
வேலை இடைவேளை	Current Affairs
7:30–9:30 PM	Revision / Answer Writing
9:30–10:00 PM	அடுத்த நாள் திட்டமிடல்

முக்கியமானது

வேலை காரணமாக தினமும் 8–10 மணி நேரம் படிக்க முடியவில்லை என்று கவலைப்பட வேண்டாம். தினமும் 3–4 மணி நேரம் தொடர்ந்து படிப்பதும், வார இறுதியில் கூடுதல் நேரம் ஒதுக்குவதும், Revision மற்றும் Mock Test-ஐ தொடர்ந்து செய்வதும் வெற்றிக்கு உதவும்.





இலங்கை தேசிய இளைஞர் மாநாடு



கடைசி கால எழுப்புதல் அக்கினியை உலகமெங்கிலும் பரவச் செய்வதற்கு, இலங்கை தேசத்தில் உள்ள வாலிபர்களைத் தேவன் தெரிந்துகொண்டார். இந்த எழுப்புதல் தரிசனம் வாலிபர்கள் மத்தியில் பரவ வேண்டும் என்பதற்காக, ஆகஸ்ட் மாதம் 20, 21, 22 ஆகிய தேதிகளில் **மேல் மாகாணத்தைச் சேர்ந்த மாதம்பேயில் உள்ள அபேகெதல்ல சென்டரில்,** இலங்கை தேசத்தில் உள்ள வாலிபர்களுக்காக தேசிய இளைஞர் மாநாடு நடைபெற்றது. இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலிருந்தும், 25 மாவட்டங்களிலிருந்தும் **1,084 வாலிப சகோதர சகோதரிகள்** கலந்துகொண்டார்கள்.







சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள், **"யோசுவாவின் வாழ்க்கையை"** மையமாக வைத்து எழுப்புதல் செய்திகளைப் பகிர்ந்துகொண்டார்கள். கடைசி கால எழுப்புதல் அக்கினியை உலகமெங்கிலும் பரவச் செய்வதற்கு அர்ப்பணித்த







ஒவ்வொருவரையும் தேவன் தம்முடைய வல்லமையினால் நிரப்பினார். விசேஷமாக, அநேக வாலிபர்கள் ஜெப அபிஷேகத்தினாலும், சுவிசேஷ அபிஷேகத்தினாலும் நிரப்பப்பட்டார்கள்.

தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வகுமார் அவர்கள், **"தீர்க்கதரிசன தலைமுறை"** குறித்தும், **"தீர்க்கதரிசன அபிஷேகம்"** குறித்தும் தேவ செய்தி அளித்தார்கள். ஜெப வேளையில், அநேக வாலிபர்கள் தரிசனங்களையும், ஆவிக்குரிய புதிய அனுபவங்களையும், தீர்க்கதரிசன அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டார்கள். அநேக வாலிபர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்களை பகிர்ந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

சகோதரர் சாம் ஜெபராஜ் அவர்கள், எழுப்புதல் அக்கினியைப் பரவச் செய்வதற்கு யுத்த ஜெபத்தைக் குறித்தும், ஜெப நடை ஊழியத்தைக் குறித்தும் பகிர்ந்துகொண்டு, கூடிவந்திருந்த வாலிபர்களை ஜெபத்தில் நடத்தினார்கள்.

கலந்துகொண்ட அத்தனை வாலிபர்கள் மீதும் இயேசு கிறிஸ்து கடைசி கால எழுப்புதல் அக்கினியைப் பொழிந்தருளினார். கடைசிகால எழுப்புதல் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட வாலிப சகோதர சகோதரிகள், "தேவனுக்காக எழும்பிப் பிரகாசிப்போம்" என்ற தரிசனத்தோடும், உறுதியோடும் புறப்பட்டுச் சென்றார்கள்.



ஆலோசனை: அவி

கனவா? கவனச்சிதறலா?

முடிவு உன் கையில்!



நான் 12ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறேன். எங்கள் குடும்பத்தினர் பரம்பரை கிறிஸ்தவர்கள். நானும் என் அக்காவும் ஜெபித்து, வசனம் படித்து ஒப்புவித்தால்தான் சாப்பாடு கிடைக்கும். இப்படி மிகக் கட்டுப்பாடோடு வளர்க்கப்பட்டோம். தற்போது அக்காவுக்குத் திருமணமாகி, வெளிநாட்டில் இருக்கிறார்கள். மருத்துவராக வேண்டும் என்பதே எனது கனவு. அதற்காக இரவும் பகலும் +2 பாடங்களைக் கவனமாக Hard work பண்ணிப் படித்து வருகிறேன். என்னுடன் படிக்கும் மாணவனிடம் பாடம் சம்பந்தமாக அடிக்கடி பேசுவேன். எங்களுடைய அந்த நட்பு நாளடைவில் காதலாக மாறியிருப்பதோ என்று தெரியவில்லை. என்னால் பாடத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. எப்போதும் அந்த நபரோடு பேசினால் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. இதனால் கடந்த தேர்வில் 2 பாடங்களில் தோல்வியடைந்தேன். இது என் ஆசிரியருக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. 10ஆம் வகுப்பில் school First வருத்த நீ, இப்போது 2 பாடங்களில் Fail ஆனதற்கு உன் கவனம் எங்கேயோ சிதறுகிறது. கவனமாக இரு என்று ஆசிரியர் சொன்னபோது, எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

அதே நேரத்தில், இந்த உறவிலிருந்து எப்படி வெளியே வருவது? என்னால் மீண்டும் எழுப முடியுமா? நான் மருத்துவராகி என் படிப்புக்கு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்ற கனவு நிறைவேறுமா? Please எனக்கு help பண்ணுங்க!

– ராகுல், மைசூர்

அன்பு சகோதரர் ராகுல்,

உங்களுடைய நிலமையை நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. சிறுவயதிலேயே ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, பல நல்ல பண்புகளோடு வளர்க்கப்பட்ட நீங்கள், தற்போது ஒரு தடுமாற்றத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ராகுல், ஒவ்வொரு வாலிபருக்கும் இந்தப் பதின் பருவத்தில் ஒரு **Attraction** ஏற்படுவது சகஜம். ஆனால் இந்த **Emotion**-ஐ நீங்கள் சரியாக **handle** செய்தால், நிச்சயம் வெற்றி பெற முடியும். மேலும், இப்பொழுது ஏற்பட்ட தோல்விக்கு உங்கள் கவனக்குறைவும், பயிற்சியின்மையும், குறிக்கோளுடன் படிக்காததுமே காரணமாக இருக்கலாம்.

ஒவ்வொரு மாணவரும் ஜூன் மாதம் ஆரம்பிக்கும்போது ''நன்றாகப் படிக்க வேண்டும், அதிக மதிப்பெண் எடுக்க வேண்டும்'' என்ற குறிக்கோளோடுதான் பள்ளிக்கு செல்கிறார்கள். ஆனால், மாதங்கள் செல்லச் செல்ல சில **Disturbance**, சில **Deviation** எனத் தொடங்கி, முடிவில் **Destruction**-ல் முடிகிறது.

ராகுல், யாருமே பெரிய பாறாங்கல்லில் தடுக்கி விழுவதில்லை; ஆனால் பலரும் சிறிய கல்லில் தடுக்கி விழுவார்கள். அதுபோலத்தான் சிறிய கவனக்குறைவுகூட ஒரு பெரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும். பல கனவுகளோடு களம் இறங்கிய நீங்கள், இன்று உங்கள் கவனக்குறைவால் தடுமாறித் தடம் புரண்டுவிட்டீர்கள்.

ராகுல், இந்தக் காதல் என்னும் படுகுழியிலிருந்து வெளியே வர விரும்பினால், உங்களால் நிச்சயம் மீள முடியும். மீண்டும் ஒரு புதிய ஆரம்பத்தை உங்கள் படிப்பில் ஏற்படுத்தினால், உங்களுக்கு வெற்றி நிச்சயம். மனம் சோர்ந்துபோக வேண்டாம்.

உங்களுடைய டாக்டர் கனவு நனவாக சில Tips:



◂ என்னுடைய டாக்டர் படிப்பை முடிக்கும் வரை, வேறு எதிலும் என் கவனத்தைத் திருப்ப மாட்டேன் என்று முதலில் ஓர் உறுதியான தீர்மானம் எடுக்க வேண்டும்.



◂ அந்த மாணவியுடனான நெருக்கமான நட்பைக் கட்டாயம் தவிர்க்க வேண்டும். இல்லை யென்றால், மீண்டும் தோல்வியும் வீழ்ச்சியும் தொடரலாம்.



◂ Class Room-ல் உங்கள் இடத்தை மாற்றி, முன்னால் அமர்வது அதிக கவனத்தோடு படிக்கத் துணையாக இருக்கும்.



◂ படிக்கும் ஆண் நண்பர்களுடனான உங்கள் நட்பைத் தொடர்வது நல்லது.



◂ 24 Hours-க்கான Timetable போட்டு, அதன்படி செயல்பட முயலுங்கள்.

தேவையில்லாத Gadgets, Social Media, Mobile போன்றவற்றிலும் அதிக கவனம் செலுத்த வேண்டாம். All these things will distract you from your destiny.



மேலும், நீங்கள் எடுத்த ஒவ்வொரு தீர்மானத்திலும் உறுதியாக இருக்க, ஒவ்வொரு நாளும் தவறாமல் 15 நிமிடம் ஜெபம் செய்து, 15 நிமிடம் வேதத்தைத் தியானித்து ஆவிக்குரிய பெலனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இயேசப்பா உங்களைப் பெலப்படுத்தினால்தான், உங்களால் பெலத்தோடு இருந்து, தீர்மானத்தில் உறுதியாக இருக்க முடியும்.

◂ தானியேல் தான் எடுத்த தீர்மானத்தில் உறுதியாக இருக்க தேவன் கிருபை செய்தார்.

◂ தானியேலுக்கு ஜெயம் தந்து உயர்த்திய தேவன், உங்களையும் உயர்த்தி ஆசீர்வதிப்பார்!

All the Best!

சிந்தனைக் கட்டுரை : ரோஸி

புன்னகை மனச்சோர்வு



இந்தத் தலைப்பைப் பார்த்தவுடன், **"இது நமக்கானதுதானோ?"** என்று தோன்றுகிறதா? இன்றைய இளம் தலைமுறையில் பலர் தங்களுக்குள் இருக்கும் மனவலியையும் சோர்வையும் வெளியில் காட்டாமல், புன்னகையுடன் வாழ்க்கையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை பொதுவாக **Smiling Depression** என்று குறிப்பிடுகிறோம்.

Smiling Depression என்றால் என்ன?

வெளியில் மகிழ்ச்சியாகவும், இயல்பாகவும் காணப்பட்டாலும், உள்ளுக்குள் **வெறுமை, பயம், மனவலி, நம்பிக்கையின்மை** போன்ற உணர்வுகளைச் சுமந்து வாழ்வது Smiling Depression எனப்படுகிறது. தன் வலியை மறைத்து, **"நான் நன்றாக இருக்கிறேன்"** என்று காட்டிக்கொண்டு பலர் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கான காரணங்கள்:

சிலர் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தாமல் மறைத்துக்கொள்ளப் பழகிவிடுகின்றனர்.

- **"நான் Strong-ஆக இருக்க வேண்டும்."**
- **"என் பிரச்சனையை யாரிடமும் சொல்லக்கூடாது."**
- **"நான் மற்றவர்களுக்கு burden ஆகிவிடக்கூடாது."**
- **"நான் பலவீனமாகத் தெரிந்துவிடுவேனோ?"**
- **"மற்றவர்கள் என்னை judge செய்துவிடுவார்களோ?"**

மேலும் guilt, worthlessness, hopelessness, low self-esteem போன்ற உணர்வுகளும் மனச்சோர்வை அதிகரிக்கலாம்.

உணர்வுகளை மறைப்பது – Masking



குடும்பப் பிரச்சனைகள், அவமானங்கள், தோல்விகள் அல்லது நீண்டகால சிரமங்கள் போன்றவற்றால் ஏற்பட்ட மனவலியை வெளிக்காட்டாமல், **"எல்லாம் சரியாக இருக்கிறது"** என்று காட்டிக்கொண்டு அன்றாட வாழ்க்கையைத் தொடர்வது, உணர்வுகளை மறைத்தல் அல்லது Masking எனலாம்.

"நானும் இப்படித்தான் வாழ்கிறேனா? இது மனச்சோர்வா?" என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம்.

இதிலிருந்து எப்படி வெளியே வரலாம்?

1. Acceptance – ஏற்றுக்கொள்ளுங்கள்

கடந்த காலத்தில் நடந்தவற்றை மாற்ற முடியாது. ''ஏன் இது எனக்கு நடந்தது?'' என்று தொடர்ந்து சோர்ந்து போகாமல், நடந்ததை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து வெளியே வர முயற்சி செய்யுங்கள்.

2. "I'm Okay" என்ற Mask-ஐ அகற்றுங்கள்

உள்ளுக்குள் வலியைச் சுமந்துகொண்டு தனியாகப் போராடாதீர்கள். உங்களைப் புரிந்துகொள்ளும் நம்பிக்கையான நண்பர், பெற்றோர் அல்லது ஆவிக்குரிய வழிகாட்டியிடம் மனம் திறந்து பேசுங்கள்.

3. Negative Thoughts-ஐ மாற்றுங்கள்

''**நான்** Weak'', ''**நான்** Worthless'' என்று உங்களை நீங்களே குற்றப்படுத்தாதீர்கள். உங்களைப் பற்றிய ஆரோக்கியமான மற்றும் நம்பிக்கையான எண்ணங்களுக்கு இடம் கொடுங்கள்.

4. தனிமையைத் தவிருங்கள்

மனச்சோர்வை ஏற்படுத்தும் எண்ணங்கள் வரும்போது தனியாக இருப்பதைத் தவிர்த்து, பெற்றோர், நல்ல நண்பர்கள் மற்றும் ஆவிக்குரியவர்களுடன் நேரத்தைச் செலவிடுங்கள்.

நினைவில் கொள்ள,

புன்னகைக்குப் பின்னால் மறைந்திருக்கும் வலியை யாரும் அறியாமல் இருக்கலாம். ஆனால் அந்த வலியை நீங்கள் தனியாகச் சுமக்க வேண்டிய அவசியமில்லை. **மனம் திறந்து பேசுவது பலவீனம் அல்ல; உதவி கேட்பது தைரியம்.**

நடைமுறை செய்தி: காலேப்

இரயில் பயணம்

உணவுப் பொருட்களின் விலை உயர்வு?



விக்கியும் ஆண்ட்ரூவும் வேலை முடித்து, தாம்பரத்திலிருந்து சென்னை செல்லும் இரயிலில் வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.



ஆண்ட்ரூ: ரொம்ப tired-ஆ இருக்கு விக்கி... ஒரு டீ குடிப்போமா?

விக்கி: ஆமாடா... நானே கேட்கணும்னு நினைச்சேன்.

(அப்போது, "டீ... காபி... சூடான டீ, காபி..." என்று சத்தமிட்டுக்கொண்டே ஒருவர் டீ விற்றுக்கொண்டு வருகிறார்.)

ஆண்ட்ரூ: அண்ணா, இரண்டு டீ எவ்வளவு?

வியாபாரி: 30 ரூபாய் சார்.

விக்கி: என்னடா இது... பகல் கொள்ளையா இருக்கு! ஒரு டீ 10 ரூபாய்தானே?

வியாபாரி: நீங்க எந்தக் காலத்துல இருக்கீங்க சார்? எல்லாப் பொருட்களோட விலையும் ஏறி ரொம்ப நாளாச்சு. வேணும்னா வாங்குங்க... இல்லன்னா விட்டுடுங்க. என் நேரத்தை ஏன் சார் வீணடிக்கிறீங்க?

(என்று சொல்லிவிட்டு, தன்னுடைய கஷ்டங்களையும் சோகத்தையும் சுருக்கமாக அவர்களிடம் கூறிவிட்டு செல்கிறார்)



ஆண்ட்ரூ: சரி சார்... இரண்டு டீ கொடுங்க.

(இருவரும் டீ வாங்கிக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள்.)

ஆண்ட்ரூ: அந்த டீ விற்கிறவர் சொன்னது உண்மைதான் விக்கி. சமீபத்துல ஒரு செய்தி பார்த்தேன். அதுல, போர்கள் மற்றும் மோசமான



காலநிலை மாற்றங்கள், குறிப்பாக பூமி வெப்பமயமாதல் போன்ற காரணங்களால், உணவுப் பொருட்களின் விலை கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

விக்கி: ஆமாடா... நானும் கவனிச்சிருக்கேன். ஒவ்வொரு மாசமும் வழக்கமா வாங்குற அதே மளிகைப் பொருட்களைத்தான் வாங்குறோம். ஆனா, காசு மட்டும் அதிகமாகிட்டே போகுது!

ஆண்ட்ரூ: ஆமா விக்கி. இப்படி எல்லாம் நடக்கும்னு இயேசுவே பைபிள்ல சொல்லியிருக்காரு.

(என்று சொல்லி, மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில் உள்ள வேதப்பகுதியை விக்கியிடம் காண்பிக்கிறான்)

விக்கி: அப்படியா! அப்போ, இதற்கு என்ன தீர்வு? இந்தச் சூழ்நிலை மாறுமா? இதைப் பற்றி பைபிள்ல ஏதாவது சொல்லியிருக்கா?

ஆண்ட்ரூ: ஆமா... உலகத்துல இதுபோன்ற பிரச்சனைகளும் ஆபத்துகளும் வரத்தான் செய்யும். ஆனா, இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு, அவர் தேவையானதைப் பார்த்துக்கொள்வார் என்று வேதம் சொல்லுது.

எவ்வளவு பெரிய தேவைகள் வந்தாலும், ''இயேசு என்னைப் பார்த்துக்கொள்வார்'' என்ற விசுவாசம் நமக்கு இருக்கணும் விக்கி!

இதைப் பற்றி இன்னும் நிறைய விஷயங்கள் இருக்கு. ஒரு நாள் உனக்கு விளக்கமா சொல்றேன்.

விக்கி: சரிடா... Interesting-ஆ தான் இருக்கு!

(நாமும் ஜெபம் பண்ணி, தேவன் எப்படி நடத்துறாருன்னு பார்ப்போம் என்று விக்கி தன் இருதயத்தில் சொல்லிக்கொண்டான்).

REVVAL IGNITERS -LIVE-

நவம்பர் 29
(ஞாயிற்றுக்கிழமை)

ஒவ்வொரு மாதமும் திறப்பின் வாசலுக்கு (கடைசி சனி) அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணி முதல் 5.30 மணி வரை, இயேசு விடுவிக்கிறார் சமூக வலைத்தளங்கள் {YouTube (Jesus Redeems Official & Youth Trendz) மற்றும் Facebook} வழியாக நேரலையில் பார்க்கலாம்..





இந்த நிகழ்ச்சியை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். அவர்களையும் இணைத்து, ஆவிக்குரிய புதுப்பொலிவை அனுபவிக்கச் செய்யுங்கள்.

ஜெபம் : ரோஸி



கோ-லிவிங் கலாச்சாரத்தின் தாக்கத்திலிருந்து வாலிபர்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்

அண்மைக்காலமாக, **'கோ–லிவிங்'** (Co-Living) **விடுதிகள்** பெங்களூரு, டெல்லி, ஹைதராபாத், புனே, மும்பை போன்ற நகரங்களில் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளன. கோ–லிவிங் வசதியைத் தேடுபவர்களில் 65.7% **பேர் இளம் வேலைவாய்ப்புத் துறையினர்** (Working Professionals) என்றும், மீதமுள்ளவர்கள் மாணவர்கள் என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

குடும்பக் கண்காணிப்பும், கடுமையான விதிமுறைகளும் குறைவாக இருப்பதால், சில இளைஞர்கள் போதைப்பொருள் பயன்பாடு, மதுப்பழக்கம், இரவு நேர பார்ட்டிகள் போன்ற தீய பழக்கங்களுக்கு ஆளாகும் அபாயம் உள்ளது.

இத்தகைய புதிய கலாச்சாரங்களின் தீய தாக்கங்கள் தடுக்கப்படவும், வாலிபர்களின் பரிசுத்தத்தைக் கெடுக்கும் வகையிலான கார்ப்பரேட் நிறுவனங்களின் திட்டங்கள் முடக்கப்படவும் **ஜெபிப்போம்.**

குழந்தைத் திருமணங்களும் சிறார் கர்ப்பங்களும் தடுக்கப்பட ஜெபிப்போம்

2026–ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், மேற்கு வங்க மாநிலத்தில் சுமார் 60,000 **சிறுமிகள் (18 வயதுக்குட்பட்டவர்கள்)** பிரசவத்திற்காக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முர்ஷிதாபாத் மாவட்டத்தில் பதிவான வழக்குகளில், 15 **வயதுக்குக் குறைவான** 253 **சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளதும்** தெரியவந்துள்ளது.

இந்தியாவில் குழந்தைத் திருமணங்களின் விகிதத்தில் 36.4% உடன் மேற்கு வங்கம் **முதலிடத்தில்** உள்ளது.

குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்படவும், சிறார் கர்ப்பங்கள் தடுக்கப்படவும், இதுக்குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படவும் **ஜெபிப்போம்.**

நோய்களின் பரவல் கட்டுப்படுத்தப்பட ஜெபிப்போம்

தமிழகத்தில் சமீபகாலமாக **டெங்கு**, H1N1 **பன்றிக் காய்ச்சல் மற்றும் வைரஸ் காய்ச்சல்** பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

ஆகஸ்ட் மாத இறுதி வரை, டெங்குவினால் 14,581 **பேரும்**, H1N1 பன்றிக் காய்ச்சலால் 1,558 **பேரும்** பாதிக்கப்பட்டுள்ளனர்.

செப்டம்பர் தொடக்கத்தில் பெய்த மழையைத் தொடர்ந்து, சென்னையில் ஒரே வாரத்தில் 1,900-**க்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் காய்ச்சல்** பரவியுள்ளது.

நோய்களின் பரவல் கட்டுப்படுத்தப்படவும், நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் பூரண சுகம் பெறவும் **ஜெபிப்போம்**.



பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்

நேபாள-திபெத் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட பனிப்பாறை உடைப்பைத் தொடர்ந்து, கோஷி ஆற்றில் ஏற்பட்ட பயங்கர திடீர் வெள்ளப்பெருக்கில் 1,377 **பேர் உயிரிழந்துள்ளனர்.** 5,130-**க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். 84,270-க்கும் அதிகமானோர் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.**

நேபாளத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் தாக்கத்தால், பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இனிமேல் இதுபோன்ற கோரமான பேரிடர்கள் ஏற்படாதபடியும், இந்தியாவில் வெள்ளப்பெருக்கு ஏற்படாமல் மக்கள் பாதுகாக்கப்படவும் **ஜெபிப்போம்**.



மேற்கு ஆசியாவில் அமைதி நிலவ ஜெபிப்போம்

மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் மோதல்களால், **கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு $100-ஐத் தாண்டி,** உலகளவில் பணவீக்கம் அதிகரிக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

மேற்கு ஆசியாவில் போர் பதற்றம் தணிந்து, அமைதியும் சமாதானமும் நிலவவும், உலக நாடுகள் பொருளாதாரப் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்படவும் **ஜெபிப்போம்.**



தீ விபத்துகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்

கடந்த செப்டம்பர் மாதத்தில், பிலிப்பைன்ஸ் நாட்டில் படகு ஒன்றில் திடீரென ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் **5 பேர் உயிரிழந்துள்ளனர்; 86-க்கும் மேற்பட்டோர் கடலில் மூழ்கி மாயமாகியுள்ளனர்.**

ஆப்பிரிக்க நாடான காங்கோவில் (DR Congo) இரண்டு பள்ளிகளில் திடீரென தீப்பற்றி எரிந்ததில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, **20-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**

உயிரிழந்த குழந்தைகளின் குடும்பங்களுக்கு ஆறுதலும் தேறுதலும் கிடைக்கவும், இனிமேல் இதுபோன்ற தீ விபத்துகள் ஏற்படாதபடி **ஜெபிப்போம்.**



குழந்தைகள் ஆன்லைன் பாலியல் சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்பட ஜெபிப்போம்

கடந்த 10 மாதங்களில், Instagram-ல் AI மூலம் உருவாக்கப்பட்ட **குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகப் பொருட்கள்** (CSAM) இடம்பெற்ற **332 கட்டண விளம்பரங்கள்** கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் 274 **விளம்பரங்கள் ஆகஸ்ட்** 2026-ல் வெளியிடப்பட்டவை. இந்தியாவிலும் இதுபோன்ற விளம்பரங்கள் இடம்பெற்றுள்ளன.

குழந்தைகள் ஆன்லைன் பாலியல் சுரண்டலிலிருந்து பாதுகாக்கப்படவும், இதுபோன்ற தீய மற்றும் ஆபத்தான உள்ளடக்கங்கள் உடனடியாகத் தடுக்கப்படவும் **ஜெபிப்போம்**.



தகவல்: ஜெனிபர்



வேதாகமமும் அறிவியலும்

Hello Friends! "வேதாகமமும் அறிவியலும்" என்னும் இத்தொடரில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

Friends, வானத்தில் V வடிவில் பறக்கும் பறவைகளைப் பார்த்து நீங்கள் எப்பொழுதாவது ஆச்சரியப்பட்டதுண்டா?

வெறும் ஐந்தறிவைக் கொண்ட இந்தப் பறவைகள் எப்படி இவ்வளவு கச்சிதமாக, வரிசை மாறாமல் V வடிவில் பறக்கின்றன? இதன் பின்னணி என்ன?

வாங்க, பார்க்கலாமா?

பெரும்பாலும் வாத்துகள், நாரைகள் மற்றும் இடம்பெயரும் பறவைகள் நீண்ட தூரம் பறக்கும்போது V வடிவில் பறக்கின்றன. இதற்குப் பின்னால் ஓர் அற்புதமான அறிவியல் காரணம் உள்ளது.



ஆற்றலைச் சேமிக்க



ஒரு பறவை தனது இறக்கைகளை அசைக்கும்போது, அதன் பின்னால் காற்றின் மேல்நோக்கிய சுழற்சி உருவாகிறது. பின்னால் வரும் பறவைகள் அந்தக் காற்றின் உதவியைப் பயன்படுத்தி, குறைந்த ஆற்றலில் பறக்க முடிகிறது. இதனால், கூட்டமாகப் பறக்கும் பறவைகள் தனியாகப் பறப்பதைவிட அதிக தூரம் செல்ல முடிகிறது.

கூட்ட ஒற்றுமையைக் காக்க

V வடிவில் பறக்கும்போது ஒவ்வொரு பறவையும் மற்ற பறவைகளை எளிதாகக் காண முடியும். இதனால் கூட்டம் சிதறாமல், ஒன்றாகப் பயணம் செய்ய முடிகிறது.



தலைமைப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்கின்றன



V வடிவத்தின் முன்பகுதியில் பறக்கும் பறவைக்கு அதிக காற்று எதிர்ப்பு இருக்கும். அதனால் அது விரைவில் சோர்வடையும். எனவே, சிறிது நேரத்திற்குப் பிறகு மற்றொரு பறவை முன்னே வந்து தலைமை ஏற்கும். இது ஒரு சிறந்த குழுப்பணிக்கான (Teamwork) எடுத்துக்காட்டு!

நீண்ட தூர இடம்பெயர்வுக்கு உதவுகிறது

சில பறவைகள் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் பயணம் செய்கின்றன. V வடிவில் பறப்பதால், அவை குறைந்த சக்தியைப் பயன்படுத்தி நீண்ட தூரம் செல்ல முடிகிறது.



சுவாரஸ்யமான உண்மை...

சில ஆய்வுகளின்படி, V வடிவில் பறக்கும் பறவைகள் தனியாகப் பறப்பதைவிட சுமார் 10% **முதல் 20% வரை அதிக தூரம்** பயணிக்க முடியும்.

இந்தப் பறவைகள் V வடிவில் பறப்பதற்காக அவற்றின் மூத்த பறவைகள் அவற்றுக்குக் கற்றுக்கொடுப்பதில்லை. தேவன் இயற்கையாகவே அவற்றின் உள்ளுணர்வில், "கூட்டமாகப் பற, உன் இனத்தோடு இரு, இந்தத் திசையில் செல்" போன்ற சில ஒழுங்குகளை வைத்திருக்கிறார். ஒவ்வொரு பறவையும் அந்த ஒழுங்குகளைப் பின்பற்றுகிறது.

Friends, பார்த்தீங்களா?

இந்தப் பறவைகள் தேவன் தங்களுக்குள் வைத்திருக்கும் ஒழுங்குகளை எவ்வளவு கவனமாகப் பின்பற்றுகின்றன!

தேவன் நம்முடைய வாழ்க்கையிலும் அநேக ஒழுங்குகளை வைத்திருக்கிறார். அவை நம்முடைய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மிகவும் சிறியவைகளாகிய இந்தப் பறவைகள் தேவன் வைத்த ஒழுங்குகளைப் பின்பற்றும்போது, நாமும் அவற்றைக் கடைப்பிடிப்பது எவ்வளவு முக்கியம் அல்லவா?

அதுபோல, இந்தப் பறவைகள் தங்களுடைய ஒற்றுமையையும் காத்துக்கொண்டு, தலைமைத்துவத்தையும் பகிர்ந்துகொள்கின்றன.

நம் வேதாகமத்திலும், அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்குதல், ஒருவரை ஒருவர் தேற்றுதல், ஒருவரை ஒருவர் மன்னித்தல், ஒருவருடைய பாரங்களை ஒருவர் சுமத்தல் என்று ஒற்றுமையைக் குறித்து அநேக வசனங்களைப் பார்க்க முடியும்.

நாம் அநேகர் குழுவாக இணைந்து ஊழியம் செய்வது உண்மைதான். ஆனால், எந்த அளவிற்கு ஒற்றுமையும் ஒருமனமும் நம்முடைய குழுவில் இருக்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

ஒருவேளை ஒற்றுமையின்மையோ, பொறாமையோ, வீண் வாக்குவாதங்களோ, குறைகூறும் மனப்பான்மையோ, மன்னிக்காத தன்மையோ நமக்குள் இருந்தால், அது தேவன் நம்முடைய குழுக்களைக் கொண்டு செய்ய வைத்திருக்கும் தரிசனத்தை அடையவிடாமல் மிகப்பெரிய தடையாக மாறிவிடும்.

மட்டுமல்லாமல், பறவைகள் தலைமைத்துவத்தைப் பகிர்ந்துகொண்டு, தங்களோடு பயணிக்கும் மற்ற பறவைகளுக்காக ஒன்றாகச் செயல்படுவது போல, நாமும் தலைமைத்துவத்தைப் பகிர்ந்துகொண்டு, நம்மோடு இருப்பவர்களுக்காக ஜெபிப்போம்.



பறவைகள் தங்களுடைய வழிகாட்டியைப் பின்தொடர்வதுபோல, நாமும் ஜெபத்துடன் நல்ல தலைவர்களைப் பின்தொடருவோம்.

தேவன் வைத்திருக்கும் ஒழுங்கில் நடப்போம்.
ஒற்றுமையுடன் இணைந்து செயல்படுவோம்.
ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம்.
ஜெபத்துடன் நல்ல தலைவர்களைப் பின்தொடர்வோம்.

அப்பொழுது, தேவன் நம்முடைய குழுவின் மூலம் வைத்திருக்கும் தரிசனத்தை நிச்சயமாக நிறைவேற்றுவார்!

வேதாகம முன்மாதிரிகள்:
ராபின் மார்கஸ்

தாவீதின்

பராக்கிரமசாலிகளின் குணாதிசயங்கள்



வேதப்பகுதி: 2 சாமுவேல் 23:8–39; I நாளாகமம் 11:10–47

தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக இருந்தபோது, அவருடன் உண்மையோடும் வீரத்தோடும் போராடிய பல **பராக்கிரமசாலிகள்** இருந்தனர். அவர்கள் வெறும் போர் வீரர்கள் மட்டுமல்ல; **தைரியம், விசுவாசம், தியாகம், உண்மை, கீழ்ப்படிதல், ஒற்றுமை** போன்ற சிறந்த குணங்களைக் கொண்டவர்களாக இருந்தனர். அவர்களுடைய வாழ்க்கை இன்றைய வாலிபர்களுக்கும் சிறந்த முன்மாதிரியாக இருக்கிறது.

1. அஞ்சாத தைரியம் – Dauntless Courage



தாவீதின் பராக்கிரமசாலிகள், எதிரிகள் அதிகமாக இருந்தாலும் பின்வாங்கவில்லை. **யோசேப்பாசெபெத்தின் மகன் யோசேப்** ஒரே சமயத்தில் எண்ணூறு பேரை எதிர்த்து வெற்றி பெற்றான் (2 சாமுவேல் 23:8). அதேபோல் **எலெயாசார்**, இஸ்ரவேலர் பின்வாங்கியபோதும் பெலிஸ்தியர்களை எதிர்த்து நிலைத்திருந்து, தன் கை களைப்படையும் வரை போரிட்டான்; இதனால் கர்த்தர் பெரிய வெற்றியை அளித்தார் (2 சாமுவேல் 23:9–10).

உண்மையான வீரன் என்பவன் பயமே இல்லாதவன்; **தேவனை நம்பி முன்னேறுகிறவன்.**

2. தேவன்மேல் உறுதியான விசுவாசம் – Firm Faith in God



சம்மா ஒரு வயலைப் பாதுகாத்துக் கொண்டிருந்தபோது பெலிஸ்தியர்கள் வந்தனர். மற்றவர்கள் ஓடிப்போனாலும், சம்மா வயலின் நடுவில் நின்று அதைக் காத்தான். **"கர்த்தர் பெரிய இரட்சிப்பை உண்டாக்கினார்"** என்று வேதம் கூறுகிறது (2 சாமுவேல் 23:11–12).

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது: **மற்றவர்கள் கைவிட்டாலும், தேவன் கொடுத்த பொறுப்பை நாம் கைவிடக்கூடாது.** குடும்பம், கல்வி, வேலை, சபை, ஊழியம் என எந்தத் துறையிலும் சவால்கள் வந்தாலும், **"கர்த்தர் என்னுடைய பெலனும் என்னுடைய கேடகமுமாயிருக்கிறார்"** (சங்கீதம் 28:7) என்ற விசுவாசத்துடன் நிலைத்திருக்க வேண்டும்.

3. தியாக மனப்பான்மை – Self-Sacrifice



தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பெத்லகேமின் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தார்கள் (2 சாமுவேல் 23:15-17). தாவீது அந்தத் தண்ணீரைத் தன்னுடைய சுகத்திற்காகப் பயன்படுத்தாமல், கர்த்தருக்குப் பானபலியாக ஊற்றினார். **உண்மையான அன்பு தியாகத்தை உருவாக்குகிறது** என்பதை இது வெளிப்படுத்துகிறது.

வாலிபனே, தேவனுடைய பணிக்காக உன் **நேரம், திறமை, பொருள், ஆற்றல்** ஆகியவற்றை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறாயா? **"உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்"** (ரோமர் 12:1) என்ற அழைப்பை நினைவில் கொள்.

4. உண்மையும் கீழ்ப்படிதலும் – Loyalty & Obedience



தாவீதின் வீரர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை உண்மையுடன் நிறைவேற்றினர். அவர்களில் **பெனாயா** குறிப்பிடத்தக்கவர். அவன் ஒரு சிங்கத்தைக் கொன்றதோடு, வலிமையான எதிரிகளையும் வென்றான் (2 சாமுவேல் 23:20-21).

பெரிய காரியங்களில் மட்டுமல்ல, **சிறிய காரியங்களிலும் உண்மையாக இருப்பது** முக்கியம் (லூக்கா 16:10). வாலிபனே, உனக்குப் பிடித்த காரியங்களில் மட்டும் அல்லாமல், தேவன் கொடுக்கும் **ஒவ்வொரு பொறுப்பையும் உண்மையுடன் செய்து முடிக்க வேண்டும்.**

5. ஒற்றுமையுடன் செயல்படுதல் – Unity



தாவீதின் பராக்கிரமசாலிகள் தனித்திறமை கொண்டவர்களாக இருந்தாலும், ஒரே நோக்கத்துடன் ஒன்றிணைந்து செயல்பட்டனர். அவர்கள் **"முழு இருதயத்தோடும்"** தாவீதுடன் சேர்ந்தார்கள் (1 நாளாகமம் 12:38).

தேவனுடைய பணியில் தனிப்பட்ட திறமை முக்கியம்; ஆனால் **ஒற்றுமை இல்லாமல் பெரிய காரியங்களைச் செய்ய முடியாது.** பொறாமை, போட்டி, சுயநலம் ஆகியவற்றை விட்டுவிட்டு, ஒருவரை ஒருவர் மதித்து, தேவனுடைய ராஜ்யத்திற்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் (யோவான் 17:21).

அன்பான **வாலிபனே**, தாவீதின் பராக்கிரமசாலிகள் **தைரியமானவர்களாய், விசுவாசமுள்ளவர்களாய், தியாகம் செய்பவர்களாய், உண்மையுள்ளவர்களாய், ஒற்றுமையுடன் செயல்படுபவர்களாய் இருந்தார்கள்.** அவர்கள் பரிபூரணமானவர்கள் என்பதற்காக தேவனால் பயன்படுத்தப்படவில்லை; **தேவனை நம்பி, கொடுக்கப்பட்ட பொறுப்பில் உண்மையாக இருந்ததால் பயன்படுத்தப்பட்டார்கள்.**
எனவே, நீயும் அவர்களைப் போல,



இன்றே உன்னை தேவனுக்காக அர்ப்பணிக்கத் தயாரா?
தேவன் உன்னை ஒரு பராக்கிரமசாலியாக பயன்படுத்தட்டும்!



வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

EVERY 1st SUNDAY (1st Nov)

MUMBAI - DHARAVI (5PM - 7:30PM)
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9442979556

TIRUPUR (4PM - 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

TUTICORIN (3PM - 5:30PM)
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor,
Tiruchendur Road,
Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9750955548 | 9786212103

TIRUPATI (3PM)
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

EVERY 2nd SATURDAY (14th Nov)

DELHI (3 PM TO 5 PM)
World Revival Prayer Centre,
Plot 152, Pratap Nagar
Near Hari Nagar bus depot
New Delhi - 110064
7217663240

EVERY 2nd SUNDAY (8th Nov)

BANGALORE(3PM-5PM)
World Revival Prayer Centre,
57/2 Thomasappa layout (Opp)
Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

SANKARANKOIL (2:30PM - 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

MULUND (5PM - 7:30PM)
Shekinah NLA Church,
Vijay Nagar, Near Vani Vidyalaya School, Mulund-West
9004882470

THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

KOVILPATTI (2:30PM -5:30PM)
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

ALANGULAM (2:30PM)
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

THENI (2:30PM - 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

SURANDAI (2:00PM)
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

CHENGALPET (3PM - 5:30PM)
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

NAMAKKAL (3PM -5:30PM)
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Grace Auto, 1st floor,
163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

VILLUPURAM (3PM - 5:30PM)
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

ERODE (4PM - 6:30PM)
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

EVERY 3rd SATURDAY (21st Nov)

MYSORE (3:30PM - 6PM)
World Revival Prayer Center,
3818, 14th Cross, St. Mary's Road,
FTS Circle, N.R. Mohalla.
9962085523 | 9886311777

EVERY 3rd SUNDAY (15th Nov)

SALEM (3PM - 6PM)
World Revival Prayer Center,
No. 6-9, Ward No. 27, Eden Hall,Omalur Main Road.
9962085523 | 95977 54872

TIRUNELVELI (2:30 PM)
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

TIRUPORUR (3 PM - 6 PM)
Come compassion Centre,
Mettuthandalam, Tiruporur.
9710809626

COIMBATORE (4 PM)
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

TRICHY (3 PM)
World Revival Prayer Centre,
22A, 1st Floor,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

CHENNAI (3 PM)
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing,
Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

JEBAMALAI (2 PM)
Keelamathapuram, Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

TIRUVARUR (3:30PM)
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex,
TTP Main Rd,
9976766322 | 7373374733

RANIPET (3PM-6PM)
World Revival Prayer Centre,
Railway Station Road,
Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179

NAGERCOIL (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9750955548

PONDICHERRY (5PM TO 7PM)
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9962085523

CHITTOOR (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

THIRUVALLUR (3PM -5:30PM)
World Revival Prayer Centre,
H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

EVERY 4th SUNDAY (22nd Nov)

KARUR (3PM-5:30PM)
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

MUMBAI-MALAD (4PM - 6PM)
Bethel Ground Floor,
305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

PERNAMPET (3PM TO 6PM)
Revival Prayer centre, VK Road.
9442885315

THISAYANVILAI (2:30PM - 5:30PM)
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845 | 9750955548

MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road, Madurai
9750955548

உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!

செய்திகள்!

தூக்கமின்மை, மன அழுத்தம் நினைவாற்றலை பாதிக்கும்: மருத்துவர்கள் அறிவுறுத்தல்!

சென்னை: தூக்கமின்மை, மனச்சோர்வு, மன அழுத்தம் உள்ளிட்டவை நினைவாற்றலைப் பாதிக்கும் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். ஒருவரின் பெயர் நினைவுக்கு வராமல் போவது, பொருட்களை எங்கு வைத்தோம் என்பதை மறந்துவிடுவது, ஒரு விஷயத்தை நினைவுகூரச் சிறிது நேரம் எடுத்துக்கொள்வது போன்றவற்றை உடனடியாக முதுமைக்கால மறதி நோயான (டிமென்ஷியா - **Dementia**) எனக் கருத வேண்டியதில்லை. வயது அதிகரிப்பது மட்டுமின்றி, தூக்கமின்மை, மனச்சோர்வு உள்ளிட்ட பல்வேறு காரணங்களாலும் நினைவாற்றலில் பாதிப்பு ஏற்படலாம் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உலக சுகாதார அமைப்பின் தகவலின்படி, 2021ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் சுமார் 5.7 கோடி பேர் டிமென்ஷியா பாதிப்புடன் வாழ்ந்துள்ளனர். ஆண்டுதோறும் புதிதாகச் சுமார் 1 கோடி பேருக்கு டிமென்ஷியா பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் அல்சைமர் நோய் மட்டும் 60 முதல் 70 சதவீதம் வரை இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவிலும் முதியவர்களிடையே டிமென்ஷியா பாதிப்பு அதிகரித்து வருகிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் சுமார் 88 லட்சம் பேர் டிமென்ஷியா பாதிப்புடன் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. முதியோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால், எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.



இதனால், ஒருவருக்கு மறதி ஏற்பட்டால் அது வயது காரணமாகத்தான் இருக்கும் என எளிதில் கடந்து விடக் கூடாது. உடலில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளாலும் நினைவாற்றல் பாதிக்கப்படலாம். வயது அதிகரிக்கும்போது நினைவாற்றலில் சில மாற்றங்கள் ஏற்படுவது இயல்பானதாக இருக்கலாம்.

இருப்பினும், நினைவாற்றல் குறைபாடு என்பது மூளையின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றத்தால் மட்டும் உருவாகுவதில்லை எனச் சமீபத்திய ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எம்ஆர்ஐ மூளைப் பரிசோதனைகள் மற்றும் 13 ஆயிரத்துக்கும் அதிகமான நினைவாற்றல் மதிப்பீடுகளை உள்ளடக்கிய சர்வதேச ஆய்வில், சுமார் 3,700 ஆரோக்கியமான பெரியவர்கள் பங்கேற்றனர்.

– தினகரன், செப்டம்பர் 17.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

MOUNT SINAI 2026

வாலிபர்கள் ஒருநாள் உபவாச ஜெபம்!

ஒரு நாள் முழுவதும் தேசத்திற்காக, வாலிபர்களுக்காக
திறப்பிலே நின்று ஜெபிக்கக் கூடி வருவோம். தேசத்தை சுதந்தரிப்போம்.

நவம்பர் 14 சனிக்கிழமை
காலை 9 - 4 வரை

சித்தூரில்

BT Prayer Hall, BT compound,
சித்தூர், ஆந்திர பிரதேஷ்



செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்
99620 85523 | 94877 34603

சென்னையில்

ஆசீர்வாதமான சென்னை ஜெப மையம்,
7வது மாடி, B-Wing, 96, பிரின்ஸ் குஷால் டவர்ஸ்,
L.I.C. மெட்ரோ நிலையம் அருகில்,



செய்தியும் ஜெபமும்: பாஸ்டர் ராஜேந்திரன் (தேனி)
9488475315 | 044-45016562

நாலுமாவடியில்

தேவனுடைய கூடாரம்,
மோசஸ் ஹால், நாலுமாவடி.



செய்தியும் ஜெபமும்: சகோ. ஞானேஷ்
9750955547 | 04639 353333

நவம்பர் 21 சனிக்கிழமை
காலை 9 - 4 வரை

ஜெபமலையில்

கீழ மாதாபுரம், ஜெபமலை



செய்தியும் ஜெபமும்:
சகோ. கார்த்தி கமாலியேல்
83001 31000 | 9750955548

மும்பையில்

Free Methodist Church, Near Bisleri Signal,
Western Express Highway, Gundavali Metro Station,
Andheri-East, Mumbai - 400099



செய்தியும் ஜெபமும்: சகோ. குருஸ் மாசிலாமணி
90048 82470

திருச்சியில்

திருச்சி சிட்டி AG சர்ச்,
பொன்னகர், கருமண்டபம்



செய்தியும் ஜெபமும்: சகோ. ஃப்ரெடி ஜோசப்
94897 75075

பெங்களூரில்

World Revival Prayer centre (Blessed Karnataka)
No.53/2, Thomasappa Layout, Vemannapalya, Outer Ringroad,



செய்தியும் ஜெபமும்: சகோ. ஜெபசிங்
சகோ. K. தினகரன்
99620 85523 | 78990 88558

மதுரையில்

Elim A.G Church, கூடல்நகர், மதுரை.



செய்தியும் ஜெபமும்:
பாஸ்டர் பென்னட் கிறிஸ்டோபர்
97509 55548

Registered under the press and
Registration of Periodicals Act, 2023: TNBIL/2010/32847

கோயம்புத்தூரில்...

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்..

JOSHUA GENERATION

வாலிபர் எழுப்புதல் கூடுகை

2026
டிசம்பர்
5
வெள்ளிக்கிழமை

நேரம்: 9:00 AM
3:00 PM

15 முதல் 35
வயதுள்ள
வாலிபர்களுக்கு

ஜெப பாரமும் சுவிசேஷ பாரமும்
பெற்று, வல்லமை வரங்களோடு
எழும்பிப் பிரகாசிக்க, வாலிபர்களை
அன்புடன் அழைக்கிறோம்.

Location

இடம் :
ரத்தினம் கிராண்ட் ஹால்
ரத்தினம் டெக்னோபார்க்,
ஈச்சனாரி, கோயம்புத்தூர்

செய்தியும், ஜெபமும் :
சகோ. மோகன் சி. லாசரஸ்

தொடர்புக்கு:
89034 05315
98429 99022
98943 99599

REGISTER

முன்பதிவு
செய்ய
QR codeயை
ஸ்கேன்
செய்யுங்கள்...